நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 மயிலாடுதுறை
முன்னிலை : திருமதி. M.M.J.உம்முல் பரிதா, B.A., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1,
மயிலாடுதுறை.

2057 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 24 ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07–ம் நாள் செவ்வாய்கிழமை

C.N.R.No.TNMY02-000071-2020

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் 143/2020**

அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர்,
குத்தாலம் காவல் நிலையம்,
குற்ற எண். 83/2019 ..... குற்றமுறையிடுபவர்

**// எதிர் //**

1) மணிபாரத், 28/2019
த/பெ. ராஜாராமன்,
பாரதி தெரு,
குத்தாலம்.

2) அருள்பிரசாத், 21/2019
த/பெ. பிச்சைபிள்ளை,
பாரதி தெரு,
குத்தாலம்.

3) அபினாஷ், 22/2019
த/பெ. ஆனந்தன்,
புது சாலிய தெரு,
குத்தாலம்.

4) ஸ்டாலின், 23/2019
த/பெ. பாஸ்கரன்,
நம்.37, ராமாபுரம் அக்ரஹாரம்,
குத்தாலம். ..... எதிரிகள்

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021 தேதியிட்ட**
**R.O.C. No.814 /2020/ RG/F1 ன் படி வழக்கின் சுருக்கம்**
**மற்றும் Rule 106 Cr.R.P. ன்படி**
**CASE SUMMARY**

| | | | | |
|---|---|---|---|---|
| i) | The period of Remand of the Accused | Date of Remand | Date of Surrender | Released on Bail |
| | | A1 - 12.03.2019<br>A2 - 23.01.2020<br>A3, A4 - 28.11.2019 | - | A1 - 13.03.2019<br>A2 - 30.01.2020<br>A3, A4 - 28.11.2019 |

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.04.07 19:40:00 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| ii) | Date of filing of the Complaint/Final report in the Court | Filing of complaint | Filing of Final Report | |
| | | 12.03.2019 | 10.06.2020 | |
| iii) | The date of questioning of the Accused U/s.263 of the Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 | 23.09.2025 | | |
| iv) | Filling of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except petitions u/s.355 of BNSS**.** | Crlmp No. | Date of filing | Result |
| | | U/s.359(ii)of BNSS Crlmp No. 2649/25 | 26.09.2025 | Dismissed |
| | | U/s.348 of BNSS Crlmp No.820/26 | 25.03.2026 | Allowed |
| v) | Date of examination in-chief and cross-examination of a witness | Name of the witness | Date of Chief | Date of Cross |
| | | PW1 | 26.09.2025 | 26.09.2025 |
| | | PW2 | 24.03.2026 | 24.03.2026 |
| | | PW3 | 24.03.2026 | 24.03.2026 |
| | | PW4 | 25.03.2026 | 25.03.2026 |
| vi) | Date of examination of the Accused U/s.351 (1) (b) of BNSS | 01.04.2026 | | |
| vii) | Details of abscondence of an Accused and his appearance/production, as the case may be; and | Nil | | |
| viii) | Grant of stay by superior court and the results there of | Nil | | |

இவ்வழக்கு 11.06.2020ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 01.04.2026ஆம் தேதி நீதிமன்றம் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து குற்றமுறையிடுபவர் தரப்பில் மயிலாடுதுறை அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி. B. செந்தில்வடிவு அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. முத்துராமன் அவர்களும் முன்னிலையாகி இருதரப்பு வாதங்களையும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.07 19:40:16 +0530

**// தீர்ப்புரை //**

(i) **அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

சாட்சி–1 பிரகதீஷ் என்பவருக்கும் 1 வது எதிரி மணிபாரத் என்பவருக்கும் கடந்த சில நாட்களுக்கு முன்பு வாய்த்தகராறு ஏற்பட்டு இவர்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் 10.02.2019 ம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில் சாட்சி–1 தனது நண்பர் பாரதியுடன் பேசிக்கொண்டு குத்தாலம் தேரடி அருகில் நடந்து வந்தபோது முன்விரோதம் காரணமாக எதிரிகள் நால்வரும் சேர்ந்து கொண்டு சாட்சி–1 ஐ வழிமறித்து குச்சிக்காரி மகனே, தேவடியா என்று திட்டி, 1 வது எதிரி அருவாளால் சாட்சி–1 ன் வலது கால் தொடை, வலது கை மணிக்கட்டில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2, 3 எதிரிகள் இருவரும் அருவாளை காட்டி சாட்சி–1 ஐ கொலை செய்துவிடுவதாக மிரட்டிய குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 506(ii) இதசவின் கீழும், 4 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b) இதசவின் கீழும் நடவடிக்கை எடுக்க வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு வழக்கிற்கு அடிப்படையான ஆதாரங்கள் இருப்பதால் இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டது. பின்னர் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் அழைப்பாணையின் பேரில் முன்னிலையானவுடன் அவர்களுக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் யாவும் பிரிவு 230 BNSS ன் படி இலவசமாக வழங்கப்பட்டது. படித்து பார்க்க போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டது.

3) பின்னர், 1 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 506(ii) இதசவின் கீழும், 4 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b) இதசவின் கீழும் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோதும் எதிரிகள் அவற்றை மறுத்து குற்றவாளி இல்லை என்றும், எதிர்த்து வழக்காட விரும்புவதாகவும் கூறினார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள் குறியீடு செய்யப்படவில்லை.

**(ii) அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

5) அ.சா.1 க்கும் 1 வது எதிரிக்கும் கடந்த சில நாட்களுக்கு முன்பு வாய்த்தகராறு ஏற்பட்டு இவர்களுக்குள் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் 10.02.2019 ம் தேதி மாலை சுமார் 04.30 மணியளவில் அ.சா.1 தனது நண்பர் பாரதியுடன் பேசிக்கொண்டு குத்தாலம் தேரடி அருகில் நடந்து வந்தபோது முன்விரோதம் காரணமாக எதிரிகள் நால்வரும் சேர்ந்து கொண்டு அ.சா.1 ஐ வழிமறித்து குச்சிக்காரி மகனே, தேவடியா என்று

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.04.07 19:40:23 +0530

திட்டி, 1வது எதிரி அருவாளால் அ.சா.1ன் வலது கால் தொடை, வலது கை மணிக்கட்டில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், 2, 3 எதிரிகள் இருவரும் அருவாளை காட்டி அ.சா.1 ஐ கொலை செய்துவிடுவதாக மிரட்டிய குற்றம் புரிந்துள்ளதாக 1, 2 எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) கடந்த 10.02.2019ம் தேதி திரு. வெங்கடேசன் உதவி ஆய்வாளர் குத்தாலம் காவல் நிலைய பணியில் இருந்தபோது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பிரகதீஷ் என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** பெற்று காவல் நிலைய நிலைய மனு எண். 99/2019 ஆக பதிவு செய்து விசாரணைக்கு பின்பு 12.03.2019ம் தேதி முதல் தகவல் அறிக்கை மதியம் 01.30 மணிக்கு குத்தாலம் காவல் நிலைய குற்ற எண். 83/2019 ச/பி. 294(b), 341, 324, 506(ii) இ.த.சவின் படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** பதிவு செய்து, 12.03.2019ம் தேதி சம்பவ இடத்தினை பார்வயிட்டு சம்பவ இட சாட்சிகளான முரளி, ஐயாசாமி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் **அ.சா.ஆ.4** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** தயார் செய்து, பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, 1வது எதிரியை குத்தாலம் இரயிலடி அருகில் 12.03.2019ம் தேதி மாலை 04.00 மணிக்கு கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, 2வது எதிரியை 23.01.2020ம் தேதி பகல் 02.30 மணிக்கு குத்தாலம் நகரப்பூங்கா அருகில் நின்று கொண்டிருந்தவரை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, 3 மற்றும் 4வது எதிரிகளை 28.11.2019ம் தேதி காலை 08.30 மணிக்கு குத்தாலம் தேரடி அருகில் நின்று கொண்டிருந்தவர்களை கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்கவழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, பின்னர் அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெயஸ்ரீ என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6** மற்றும் புகார் வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் புலன் விசாரணையை முடித்து 24.01.2020ம் தேதியன்று எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 341, 324, 506(ii) இதசவின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) புகார்தாரர் அ.சா.1 திரு. பிரகதீஷ், கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 திரு. பாரதி மற்றும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 திரு. முரளி ஆகியோர் அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியமளித்துள்ளார்கள். கூடுதல் சாட்சியான அ.சா.4 திருமதி. ஆரோக்கிய ஜெயசுதா சிறப்பு உதவி ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.07 19:40:30 +0530

8) இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் 25.03.2026 அன்று முடித்து கொள்ளப்பட்டுள்ளது. அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகள் 7 குறிப்பிடப்பட்டு வழக்கின் தன்மை கருதி பட்டியல் சாட்சிகள் 2, 5, 6 மற்றும் 7 ஆகியோர்கள் அரசு தரப்பில் நீக்கறவு செய்யப்பட்டுள்ளார்கள்.

9) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சியத்தில், எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சிய விவரங்களை தொகுத்து எதிரிகளிடம் பிரிவு 351 (1) (ஆ) BNSS–ன் படி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பு சாட்சியம் இல்லை என்று கூறி எதிரிகள் தரப்பு சாட்சியம் 01.04.2026 அன்று முடிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

10) அரசு தரப்பானது புகார்தாரரான அ.சா.1, கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 மற்றும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டபோதிலும், அ.சா.4 சாட்சியின் மூலமாக புலன் விசாரணையானது வழக்கு சங்கதியுடன் கோர்வையாக இருப்பதாலும், புலன் விசாரணை முறையாக செய்து ஆவணங்கள் மூலமாக எதிரிகள் செய்த குற்றத்தை அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு அரசு தரப்பால் வாதிடப்பட்டது.

11) மாறாக எதிரிகள் தரப்போ, இவ்வழக்கின் புகார்தாரர், கண்ணுற்ற சாட்சி மற்றும் பார்வை மகசர் சாட்சி ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறிவிட்டதால், அரசு தரப்பு எதிரிகளின் மீதுள்ள குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி இவ்வழக்கிலிருந்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிடப்பட்டது.

<u>**(iii) தீர்வுக்குரிய பிரச்சனை**</u>

12) இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான ச/பி. 341, 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

<u>**iv) தீர்வு:**</u>

13) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் சம்பவம் 10.02.2019 ந் தேதி மாலை 04.30 மணியளவில் குத்தாலம் தேரடி பஸ் ஸ்டாப் அருகில் அமைந்துள்ளது. அமைந்துள்ளது. பின்னர் அ.சா.1 னிடம் புகார் வாக்குமூலம் பெற்று, காவல் நிலைய மனு எண்.92/2019, 12.02.2019 ம் தேதி பதிவு செய்து, விசாரணைக்கு பின்னர் 12.03.2019 ம் தேதி 13.30 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, 12.03.2019 ஆம் தேதி இரவு 07.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது. இவ்வழக்கில் காலதாமதம் குறித்து முதல் தகவல் அறிக்கையில் எவ்வித விளக்கமும் முன்வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA
Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.07 19:40:36 +0530

14) இவ்வழக்கின் புகார்தாரர் **அ.சா.1** ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், கடந்த 2019ம் ஆண்டு, மாதம், தேதி நினைவில் இல்லை, ஒரு நாள் மாலை 04.30 மணியளவில் குத்தாலம் தேரடி அருகில் கட்சிக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது, அந்த கூட்டத்தில் ஏற்பட்ட பிரச்சனையில் தன்னை யாரோ திட்டி, தாக்கினார்கள் யார் என்று தெரியவில்லை, எதிரிகளுக்கும், தனக்கும் முன்விரோதம் இருந்ததால் எதிரிகள் தான் மேற்படி செயலை செய்திருப்பார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டேன், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையது தான், அதில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியமானது தனது புகார் வாக்குமூலத்திற்கு முரண்பட்ட வகையில் அமைந்துள்ளது. எனவே அ.சா.1ன் புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.2 இந்நீதிமன்றம் நம்பும் வகையில் ஏற்கக்கூடியதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) கண்ணுற்ற சாட்சியான **அ.சா.2** தனது சாட்சியத்தில், சம்பவம் பற்றி எதுவும் தெரியாது, எந்த சம்பவத்தையும் நேரடியாக பார்க்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சியான **அ.சா.3** தனது சாட்சியத்தில், சம்பவம் பற்றி எதுவும் தெரியாது, சம்பவம் பற்றி போலிசார் தன்னிடம் விசாரித்து கையெழுத்து எதுவும் பெறவில்லை, பார்வை மகசரில் உள்ள கையெழுத்துக்களில் தன்னுடையது எதுவும் இல்லை என்று அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியமளித்துள்ளார். கூடுதல் சாட்சியான **அ.சா.4** ன் சாட்சியம், இவ்வழக்கின் புலன் விசாரணை குறித்தும், எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது குறித்தும் அமைந்துள்ளது.

16) மேற்படி அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து அ.சா.1 எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்கும் வகையில் சாட்சியம் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை என்பது தெளிவாகிறது. அ.சா.1 எதிரிகள் தான் சம்பவத்தில் ஈடுபட்டதாக நம்பும்படியாகவும், கோர்வையாகவும் சாட்சியமளிக்காதது அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை எழுப்பும் வகையில் அமைந்துள்ளது.

17) புகார்தாரரான அ.சா.1, கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 மற்றும் பார்வை மகசர் சாட்சியான அ.சா.3 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறியுள்ள நிலையில், அ.சா.4ன் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாக கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு அரசு தரப்பில் உறுதியூட்டும் வகையில் எவ்வித சாட்சியமும் அரசு தரப்பில் இல்லாத நிலையில் தனித்து இயங்குகிற உறுதியூட்டம் இல்லாத காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுவிட்டதாக தீர்மானிக்க இயலாது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

UMMUL FARITHA Digitally signed by UMMUL FARITHA Date: 2026.04.07 19:40:46 +0530

18) இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 எதிரிகளுடன் சமாதானமாக செல்வதாக இந்நீதிமன்றத்தில் BNSS பிரிவு 359(ii)ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு சமாதானமாகாத குற்றப்பிரிவு என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், அ.சா.1 எதிரிகளுடன் சமாதானமாக செல்வதால் இவ்வழக்கினை மேல் நடத்துவதால் அரசு தரப்பிற்கு யாதொரு பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19) எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கின் சம்பவத்தை பற்றி சாட்சிகள் யாரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியமளிக்காத நிலையில் சம்பவ சமயத்தில் எதிரிகள் தான் அ.சா.1 ஐ வழிமறித்து திட்டி, அருவாளால் அ.சா.1 ன் வலது கால் தொடை, வலது கை மணிக்கட்டில் வெட்டி சொற்பகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்படவேண்டும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) இறுதியாக, 1 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 324, 506(ii) இதசவின் கீழும், 2, 3 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b), 506(ii) இதசவின் கீழும், 4 வது எதிரி மீது சட்டப்பிரிவுகள் 341, 294(b) இதசவின் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் எதிரிகள் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

21) எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப்பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

22) அரசு தரப்பால் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 07–ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.07 19:40:54 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.

<u>அட்டவணை</u>

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

அ.சா.1 – திரு. பிரகதீஷ் (புகார்தாரர்)

அ.சா.2 – திரு. பாரதி

அ.சா.3 – திரு. முரளி

அ.சா.4 – திருமதி. ஆரேக்கிய ஜெயசுதா, சிறப்பு உதவி ஆய்வாளர்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.02.2019 | புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 12.02.2019 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 12.03.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 12.03.2019 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 12.03.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 12.02.2019 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று |

<u>அரசு தரப்பு சான்று பொருள் :</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் :</u> இல்லை

<u>குறிப்பு</u>

1. எதிரிகள் விசாரணையின் போது பிணையில் இருந்தார்கள்.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறைக்கு அறிவிக்கப்பட்டது.
3. சாட்சிகள் விசாரணையின் போது 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

UMMUL FARITHA

Digitally signed by UMMUL FARITHA
Date: 2026.04.07 19:41:06 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
மயிலாடுதுறை.